முக்கிய வார்த்தைகள்:
உலகம்
மறுமை
வெகுமதி / திருப்தி
தாமதமான

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**12 ஜூன் 2026 / 26 துல்ஹஜ் ஹிஜிரி 1447**

# தாமதமாகக் கிடைக்கும் வெகுமதிகளை அடைதல் - குர்ஆனியச் சிந்தனை

الحَمْدُ لِلَّهِ الَّذِي نَوَّرَ بِالْقُرْآنِ الْقُلُوبَ، وَأَنْزَلَهُ فِي أَوْجَزِ لَفْظٍ وَأَعْجَزِ أُسْلُوبٍ.
أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ.
اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ الْأَبْرَارِ، وَأَصْحَابِهِ الأَخْيَارِ.
أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللَّهِ، اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

நமது வாழ்க்கையில் "தக்வா" [இறை பக்தியை] வளர்த்துக் கொள்வோமாக; அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்போமாக; அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக. திருக்குர்ஆனின் பிரகாசமாகிறது, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக நாம் செய்யும் பயணத்தில் வெளிச்சத்தை வழங்கட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

கடந்த வார "குத்பா" பிரசங்கத்தில் ததப்புர் [சிந்தனை செய்வதன்] தொடர் ஆரம்பிக்கப்பட்டது. திருக்குர்ஆனின் முதல் தெய்வீக வெளிப்பாடாகிய "அல்-அலக்" எனும் அத்தியாயத்தில் சிந்தனை செய்யுமாறு கூறப்பட்டது. அதன்

தொடர்ச்சியாக, இந்த வாரப் பிரசங்கமானது, திருக்குர்ஆனின் "அல்-அஃலா" எனும் அத்தியாயத்தின் 16-17 வரையிலான இரண்டு வசனங்களில் சிந்தனை செய்யுமாறு அழைப்பு விடுக்கின்றது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கூறுகிறான்:

بَلْ تُؤْثِرُونَ ٱلْحَيَوٰةَ ٱلدُّنْيَا ﴿١٦﴾ وَٱلْـَٔاخِرَةُ خَيْرٌ وَأَبْقَىٰٓ ﴿١٧﴾

பொருள்: "எனினும், நீங்களோ [மறுமையை விட்டு விட்டு] **இவ்வுலக** வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறீர்கள். ஆனால் **மறுமை** [வாழ்க்கை] யே சிறந்ததாகும்; என்றும் நிலைத்திருப்பதும் ஆகும்"

நாம் ததப்புரின் அடிப்படையில் இந்த வசனங்களை அணுக வேண்டும் என்ற அடிப்படையில், இந்த வசனங்களுக்கும் நமது **உலக வாழ்க்கைக்கும்** மத்தியிலான தொடர்பு என்ன? என நாம் சிந்திக்க வேண்டும்.

முதலாவதாக, **மறுமை** வாழ்க்கை தான், சிறந்தது என அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா உறுதியாகக் கூறும் நிலையில், **இவ்வுலகின்** நிலையற்ற வாழ்க்கையால் மிக எளிதில் மனிதகுலம் வசீகரிக்கப்பட்டு விடுகிறார்கள் எனும் மனிதனின் இயல்பானப் போக்கை இந்த இரண்டு வசனங்களும் சுட்டிக் காட்டுகின்றன; எனினும், நாம் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் பின்வரும் பல கேள்விகள் எழும்:

**மரணத்துக்குப் பின்புள்ள உண்மையான மறுமை வாழ்க்கையில் நாம் நம்பிக்கைக் கொண்டிருக்கும் நிலையில், இவ்வுலக வாழ்க்கையின் இன்பங்களுக்கு நாம் ஏன் முக்கியத்துவம் கொடுக்கின்றோம்? எனும் கேள்வி எழுகிறது.**

இதற்குக் காரணம், **இவ்வுலக** வாழ்க்கை நமக்கு நெருக்கமாக உள்ளது; இவ்வுலக வாழ்க்கையைப் பார்க்க முடிகின்றது; தொட்டு உணர முடிகின்றது. உடனடியாக அனுபவிக்கவும் முடிகின்றது. ஆனால் மிகச் சிறப்பானது என

வாக்களிக்கப்பட்டுள்ள **மறுமை** வாழ்க்கையின் வெகுமதிகளோ நமது புலன்களால் இன்னும் உணரப்படாத நிலையிலுள்ளன.

**இதற்குப் பின், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, மறுமையின் வாழ்க்கை தான் சிறப்பானது என உறுதியாகக் கூறும் நிலையில், இவ்வுலக வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்கும் வாய்ப்பை நமக்கு ஏன் வழங்கியுள்ளான்? எனும் கேள்வி எழுகிறது.**

காரணம், **இவ்வுலக** வாழ்க்கை நமக்குச் சோதனையாக வழங்கப்பட்டுள்ளது; நாம் **இவ்வுலக** வாழ்க்கையை முழு விழிப்புணர்வுடனும் பொறுப்புணர்வுடனும் அனுபவிப்பதில் ஆற்றல்மிக்கவர் களாக இருக்கின்றோமா அல்லது கவனக் குறைவானவர்களாக இருக்கின்றோமா, நமக்கோ அல்லது மற்றவர்களுக்கோ அநீதம் செய்பவர்களாக இருக்கின்றோமா எனச் சோதிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது.

**அவ்வாறெனில், இவ்வசனங்கள், இவ்வுலக வாழ்க்கையை முழுமையாகப் புறக்கணித்து விட வேண்டுமென்றும், மறுமை வாழ்க்கைக்காக மட்டும் நம்மை அர்ப்பணித்து விட வேண்டுமென்றும் நமக்குக் கட்ட்ளையிடுகின்றனவா? எனும் கேள்வி எழுகிறது.**

நிச்சயம் அவ்வாறல்ல, ஒரு முஃமின் [ஓரிறை நம்பிக்கையாளர்] பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் எனக் கட்டளையிடும் திருக்குர்ஆன், **இவ்வுலக** வாழ்க்கையின் பொறுப்புகளையும் புறக்கணித்து விடக் கூடாது என வலியுறுத்திக் கூறுகின்றது. அல்லாஹ், திருக்குர்ஆனின் "அல்-கஸஸ்" எனும் அத்தியாயத்தின் 77-வது வசனத்தில் கூறுகிறான்:

وَٱبْتَغِ فِيمَآ ءَاتَىٰكَ ٱللَّهُ ٱلدَّارَ ٱلْـَٔاخِرَةَ ۖ وَلَا تَنسَ نَصِيبَكَ مِنَ ٱلدُّنْيَا ۖ

பொருள்: ”அல்லாஹ் உனக்குக் கொடுத்துள்ளவற்றிலிருந்து [அதாவது, செல்வத்திலிருந்து] **மறுமையின்** வீட்டைத் தேடிக் கொள்; எனினும், **இவ்வுலகத்தில்** உனது பங்கை [உனக்கு விதித்திருப்பதையும்] மறந்து விடாதே!”

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

இங்கு நாம், **இம்மை** வாழ்க்கைக்கும் **மறுமை** வாழ்க்கைக்கும் மத்தியில் வெறும் ஒப்பீடு செய்வதையும் கடந்து ஆழமானதொருப் பொருளை அறிந்து கொள்கிறோம். அதாவது, உண்மையில், திருக்குர்ஆனின் ”அல்-அஃலா” எனும் அத்தியாயத்தின் மேற்கூறப்பட்ட 16-17 வரையிலான வசனங்கள், மனிதர்கள் பெரும்பாலும் உடனடியான மகிழ்ச்சியையும் இன்பத்தையும் தான், தேர்ந்தெடுக்கின்றார்கள்; ஆனால் **மறுமையின்** மிகச் சிறந்த வெகுமதிகள், எவர்கள் பொறுமையாக இருந்தார்களோ, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் கட்டளைக்குக் கீழ்படிந்து நடந்து கொண்டார்களோ அவர்களுக்குத் தான் உண்டு எனக் கூறுகின்றன.

சுருங்கக் கூறின், இஸ்லாமிய ஷரீஅத், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடம் உள்ள மிகச் சிறந்த **வெகுமதிகளைத்** தேர்ந்தெடுக்குமாறு மனித ஆன்மாக்களுக்குப் பயிற்சியளிக்கின்றது.

உதாரணமாக, நமது மனோ இச்சையானது, உடனடியான இன்பத்தை அனுபவிப்பதன் பால் நம்மைத் தூண்டிக் கொண்டிருக்க, அந்நிய ஆண்களையோ அல்லது பெண்களையோ நாம் பார்க்க நேரிடும் போது நமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டுமென ஏன் இஸ்லாம் நமக்குப் போதிக்கின்றது? சூதாட்டம், தடை செய்யப்பட்ட வியாபாரங்கள், தீங்கு தரும் பொருட்கள் ஆகியவை மிக எளிதாகவும் விரைவாகவும் இலாபங்களைத் தருபவை என்றிருக்க, அவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய் சட்டப்படியானவையல்ல, அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும் என நமது மார்க்கம் ஏன் நமக்குப் போதிக்கின்றது? நமக்குக் கோபம் வரும் போது, நம்மில் உள்ள உணர்ச்சிகளை நாம் மிக எளிதாக வெளிப்படுத்த முடியும்

என்றிருக்க, பொறுமையைக் கடைப்பிடிக்குமாறும், மன்னித்து விடுமாறும் ஏன் நமது மார்க்கம் நம்மை ஆர்வப்படுத்துகின்றது?

மேற்கண்ட அனைத்து சூழ்நிலைகளிலும், உடனடியாக நமக்கு ஏற்படும் ஆசைகளை தியாகம் செய்யுமாறு நாம் பயிற்சியளிக்கப்படுகிறோம்; அவ்வாறு நாம் செய்யும் போது, **மறுமையின்** பொருள்மிக்க, மிகச் சிறந்த **வெகுமதிகளை** நாம் தேர்ந்தெடுத்தவர்களாக ஆகுவோம். இதுதான், திருக்குர்ஆனின் சிந்தனை என நாம் அறியலாம்; அதாவது, **வெகுமதியைத்** தாமதமாகத் தேடுதல் ஆகும். இதற்கு தற்கால மொழியில் **"delayed gratification"** [பொறுத்திருந்து, தாமதமாகத் திருப்தியடைதல், தாமதமான வெகுமதி] எனக் கூறப்படுகிறது. உண்மையில், இவ்விதமான சீரியச் சிந்தனையானது, அல்லாஹ்வின் கட்டளைகளைச் சுமந்துள்ள திருக்குர்ஆன் மூலம் முற்காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டதாகும்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

திருக்குர்ஆனின் "அல்-அஃலா" எனும் அத்தியாயத்தின் மேற்கண்ட இரண்டு வசனங்கள், நமது அன்றாட வாழ்க்கைக்கு நெருக்கமானதொரு சி\ந்தனையை நமக்கு வழங்குகிறது. உண்மையில் இச்சிந்தனையை நாம் ஒவ்வொரு நாளும் எதிர்கொள்கிறோம்.

தற்கால **உலகில்**, நாம் இருவித தேர்வுகளில் ஒன்றை, தேர்ந்தெடுக்க வேண்டிய நிலையை எதிர்கொள்கிறோம்; அதுதான், உடனடியான திருப்தியை அடைவதா அல்லது **நீடித்த பலனை** அடைவதா என்பதாகும். நாம் நமது நேரத்தையும் செல்வத்தையும் எவ்வாறு செலவிடுகிறோம் என்பதிலும், நமது எண்ணத்தை எப்படி செலுத்துகிறோம்; நமது உணர்ச்சிகளை எவ்வாறு ஒழுங்குபடுத்துகிறோம் என்பதிலும் அதனை எதிர்கொள்கிறோம்.

உதாரணமாக, நமது ஓய்வு நேரங்களில், நீண்ட காலப் பயன்களைத் தரும் செயல்களைச் செய்வதைத் தேர்ந்தெடுக்கின்றோமா அல்லது உடனடியானப்

பொழுதுபோக்கையும் திருப்தியையும் தரும் செயல்களில் ஈடுபடுகிறோமா? எனச் சிந்திக்க வேண்டும். நமது உறவுமுறைகள் சோதனைக்குள்ளாகும் போது, அமைதியாகவும் புரிந்துணர்வுடனும் இருப்பதைத் தேர்ந்தெடுக் கின்றோமா அல்லது தீய விளைவுகளை ஏற்படுத்துகின்ற உடனடியான எதிர்வினைகளில் ஈடுபடுகிறோமா எனவும் சிந்திக்க வேண்டும்.

இதுதான், நாம் நமது தற்கால வாழ்க்கையில், **தாமதமாகத் திருப்தியடைதல், வெகுமதிகளைப் பெறுதல் "delayed gratification"** எனும் சிந்தனையின் யதார்த்த நிலையாகும். இச்சிந்தனை நமது வீடு, தொழில் செய்யும் இடங்கள், கல்விக்கூடங்கள், ஸ்மார்ட் போன்களைப் பயன்படுத்தும் போதும் ஒவ்வொரு நாளும் நாம் எடுக்கும் ஒவ்வொரு தீர்மானத்திலும் பிரதிபலிக்க வேண்டும்.

எனவே, நாம் அடிக்கடி கேட்கின்ற இந்த இரண்டு வசனங்களை உண்மையாகவே அறிந்துள்ளோமா, நமது வாழ்க்கையில் உடன்பாடான மாற்றங்கள் ஏற்படும் வகையில் அவற்றைச் செயல்படுத்தியுள்ளோமா? என நாம் சிந்திக்க வேண்டும்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே**!

உண்மையில், **இம்மை, மறுமை** ஆகிய வாழ்க்கைகள் வித்தியாசமான வழிகளைக் கொண்டதல்ல. அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு மற்றதைப் புறக்கணித்து விட வேண்டுமென நாம் கட்டளையிடப் படவில்லை. மாறாக, நாம் **இவ்வுலகில்**, நமது குடும்பத்தார்களைப் பராமரித்தல், ஆகுமான வழிகளில் நமது வாழ்வாதாரத்தைச் சம்பாதித்தல், பாவங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றுக்காக நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் -அவை அல்லாஹ்வின் திருப்தியை நாடி செய்யப்பட்டிருந்தால்- அவை **இவ்வுலக** வாழ்க்கையை நமது **மறுமை** வாழ்க்கையுடன் தொடர்பை ஏற்படுத்துபவையாக அமையும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, தீர்மானங்களை **மறுமையின்** சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கின்ற, அதேசமயம், **இவ்வுலக** வாழ்க்கையின் தமது பொறுப்புகளைப் புறக்கணிக்கா மலிருக்கின்ற உள்ளங்களை நமக்கு வழங்குவானாக! பொறுமையாக இருக்கின்ற, தமது ஆசைகளைக் கட்டுப்படுத்துவதில் உறுதியாக இருக்கின்ற, அல்லாஹ்வுக்குத் திருப்தியை ஏற்படுத்துகின்ற வழியைத் தேர்ந்தெடுப்பதில் நிலைத்து நிற்கின்ற நல்லடியார்களில் ஒருவராக நம்மனைவரையும் ஆக்கி, அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالحَرْبَ وَالاِعْتِدَاءَ. اللَّهُمَّ إِنَّا نَسْتَوْدِعُكَ أَنْفُسَنَا وَأَهْلَنَا وَبِلَادَنَا، وَنَعُوذُ بِكَ مِنْ شُرُورِ الْمُفْسِدِينَ، وَكَيْدِ الْمُعْتَدِينَ، وَظُلْمِ الظَّالِمِينَ. اللَّهُمَّ إِنَّا نَجْعَلُكَ فِي نُحُورِهِمْ، وَنَعُوذُ بِكَ مِنْ شُرُورِهِمْ.

اللَّهُمَّ يَا مُنْزِلَ الْكِتابِ، وَيَا مُجْرِيَ السَّحَابِ، وَيَا هَازِمَ الْأَحْزَابِ، اهْزِمِ الْأَحْزَابَ، وَانْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِيْنَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.